International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

புலம்பெயர் தமிழரின் பண்பாட்டு அடையாளமும் பண்பாட்டு மொழிக்கல்வியும்

பொன்னையா விவேகானந்தன்
முனைவர் பட்ட ஆய்வாளர்

பேராசிரியர் முதுமுனைவர் - அரங்க. பாரி
ஆய்வு நெறியாளர் - புலமுதன்மையர், தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஆய்வுச் சுருக்கம்

'புலம்பெயர் தமிழரின் பண்பாட்டு அடையாளமும் பண்பாட்டு மொழிக்கல்வியும்' என்னும் இக்கட்டுரை, புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளம், மொழிப்பேணல், அடையாளங்களைச் சுமந்துசெல்லும் தலைமுறைத் தொடர்ச்சி ஆகியவற்றை ஆராய்கிறது. 'பண்பு', 'பண்பாடு' ஆகிய சொற்களின் தொன்மையையும் பொருள் வளர்ச்சியையும் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் முதலியவற்றின் அடிப்படையில் விளக்குவதுடன், தமிழைப் பண்பாட்டு நினைவுகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் தலைமுறைகளுக்குக் கடத்தும் மொழியாக அடையாளப்படுத்துகிறது. கடந்த அரை நூற்றாண்டில் கட்டமைப்பு இயல்புகளுடன் விரிவடைந்துள்ள இப்புதிய தமிழர் வாழ்வியல் தளம் இன அடையாளம் மிக்க இருப்பைப் பேணுவதிலும் பண்பாட்டு மரபுகளைக் கைக்கொள்வதிலும் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றது. இவ்வாய்வு, இவ்விடர்களை அடையாளம் கண்டு, அவற்றை எதிர்கொள்வதற்கான கல்வி மற்றும் நிறுவன வழிமுறைகளையும் முன்வைக்கிறது.

பண்பாட்டு ஆய்வு, புலம்பெயர்வு ஆய்வு, சமூகமொழியியல் ஆகிய துறைகளை இணைக்கும் தரவிளக்க அணுகுமுறையில் அமைந்த இவ்வாய்வு, கடந்த ஐம்பது ஆண்டுகளில் வெளியான நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், மக்கள்தொகைக் கணக்கெடுப்புகள், நிறுவன அறிக்கைகள், ஆய்வாளரின் கல்விப்பணி சார்ந்த அவதானிப்புகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொள்கிறது. வாழிட நாடுகளின் பொதுமைப் பண்பாடு, தலைமுறை மாற்றம், தாயக உறவின் இடைவெளி, பொருளாதார அழுத்தம், தாய்மொழிப் பயன்பாட்டின் வீழ்ச்சி ஆகியவை தமிழரின் பண்பாட்டுத் தொடர்ச்சிக்குச் சவால்களாக அமைவதை ஆய்வு சுட்டுகிறது. வாழிடநாட்டின் பொதுவாழ்வில் ஒருங்கிணைந்தவாறே இனஞ்சார் அடையாளத்தையும் பேண முடியும் என வலியுறுத்தும் கட்டுரை, தாய்மொழியைப் பண்பாட்டு மொழியாகக் கற்பித்தல், கலை–வரலாறு–வாழ்வியல் இணைந்த கல்வியை முன்னெடுத்தல், வலுவான பண்பாட்டு நிறுவனங்களையும் கட்டுக்கோப்பான சமூகத் தலைமையையும் உருவாக்குதல் ஆகியவற்றைப் புலம்பெயர் தமிழரின் நிலையான எதிர்காலத்திற்கான அடிப்படைத் தேவைகளாக முன்வைக்கிறது. இக்கட்டுரையின் திறவுச் சொற்களாக புலம்பெயர் தமிழர், பண்பாட்டு அடையாளம், பண்பாட்டு மொழி, பண்பாட்டு மொழிக்கல்வி, தலைமுறைத்

தொடர்ச்சி, பன்முகப் பண்பாடு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஆய்வு முறைமை

இக்கட்டுரை பண்பாட்டு ஆய்வு, புலம்பெயர்வு ஆய்வு, சமூகமொழியியல் ஆகிய துறைகளை இணைக்கும் தரவிளக்க (Qualitative Descriptive) அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. புலம்பெயர் தமிழர் தொடர்பாகக் கடந்த ஐம்பது ஆண்டுகளில் வெளியிடப்பட்ட ஆய்வுகளை முதன்மைக் காலவரம்பாகக் கொண்டுள்ள இக்கட்டுரை, "பண்பு", "பண்பாடு" ஆகிய கருத்துகளின் வரலாற்றுப் பின்னணியை விளக்குவதற்குத் தொல்காப்பியம், கலித்தொகை, திருக்குறள் போன்ற பழந்தமிழ் முதன்மை நூல்களையும் பயன்படுத்துகின்றது. தரவுகள், காலப்பொருத்தம், நம்பகத்தன்மை, ஆய்வுமுறைத் தெளிவு, தமிழ்ப் புலம்பெயர் அனுபவத்துடனான தொடர்பு ஆகிய அளவுகோல்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் மொழிப்பேணல், பண்பாட்டு மாற்றம், தலைமுறை வேறுபாடு, எதிர்கொள்ளும் சவால்கள் என்ற கருப் பொருள்களின்படி குறியிடப்பட்டு ஒப்பீட்டுப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வு பெரும்பாலும் இரண்டாம் நிலை ஆதாரங்களைச் சார்ந்திருப்பதால், அதன் முடிவுகள் அனைத்துப் புலம்பெயர் தமிழரையும் ஒரேவகையில் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கருதப்படக் கூடாது; எதிர் காலத்தில் நேர்காணல், பங்கேற்பு அவதானிப்பு, வினாத்தாள் வழித் தரவுகளால் இம்முடிவுகள் மேலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இத்தகு சான்றுகளோடு, ஆய்வாளரின் முப்பது ஆண்டுகால கல்விப் பணியினூடாகப் பெறப்பட்ட கள அவதானிப்பு களும் இக்கட்டுரையில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

தமிழர் பெயர்வுற்றுப் பல நாடுகளில் வாழ்கின்ற போதிலும், கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் வாழும் தமிழரின் வாழ்வியல் களங்களே இவ்வாய்வின் முதன்மைப் பரப்பாக அமைகின்றன. இக்கட்டுரையில் இவை வாழிட நாடுகள் என்ற பொதுச்சொல்லால் சுட்டப்படுகின்றன.

ஆய்வின் முதன்மையும் ஆய்வு வினாக்களும்

புலம்பெயர் தமிழரின் மொழி மற்றும் பண்பாட்டு அடையாளம் தலைமுறை மாற்றம், வாழிடநாட்டின் சமூகச் சூழல், குடும்ப மொழிப்பயன்பாடு, கல்வி, பொருளாதாரம், பொதுமைப் பண்பாடு ஆகியவற்றின் தாக்கத்தால் தொடர்ந்து மறுவடிவம் பெற்று வருகின்றது. இம்மாற்றம் வெறுமனே தமிழ்மொழிப் பயன்பாட்டுடன் தொடர்புடையதாக மட்டும் அமையாமல், குடும்ப நினைவு, உறவுமுறை, பண்பாட்டு விழுமியங்கள், கலை–இலக்கிய ஈடுபாடு மற்றும் சமூகத் தொடர்ச்சி ஆகியவற்றிலும் தாக்கம் செலுத்துகின்றது. எனவே, புலம் பெயர் தமிழரின் பண்பாட்டு அடையாளப் பேணலில் தமிழ்மொழியின் இடத்தையும், தமிழைத் தொடர்பாடல் மொழியாக மட்டுமன்றி பண்பாட்டு நினைவுகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் தலைமுறை களுக்குக் கடத்தும் பண்பாட்டு மொழியாகக் கற்பிக்க வேண்டியதன் தேவையையும் ஆராய்வது முதன்மை பெறுகின்றது. இப் பின்னணியில், புலம்பெயர் தமிழரின் மொழி –பண்பாட்டுத் தொடர்ச்சி எதிர்கொள்ளும் சவால்களையும் அவற்றை எதிர்கொள்வதற் கான கல்வி, நிறுவன வழிமுறைகளையும் கண்டறியும் நோக்கில் பின்வரும் ஆய்வு வினாக்கள் முன்வைக்கப்படுகின்றன.

"பண்பு", "பண்பாடு" ஆகிய கருத்துகள் தமிழ்ச் சிந்தனை மரபில் எவ்வாறு பொருள் வளர்ச்சி பெற்றுள்ளன?

தமிழ்மொழியைப் "பண்பாட்டு மொழி" என அடையாளப்படுத்துவதற்கான மொழியியல், இலக்கிய மற்றும் சமூக அடிப்படைகள் யாவை?

புலம்பெயர் வாழிடங்களில் தலைமுறை மாற்றம் தமிழரின் மொழிப்பயன்பாட்டிலும் பண்பாட்டு அடையாளத்திலும் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது?

வாழிடநாடுகளின் தேசியப் பொதுமைப் பண்பாடு புலம்பெயர் தமிழரின் மொழி மற்றும் பண்பாட்டு நடத்தைகளில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது?

புலம்பெயர் மாணவர்களுக்கான தமிழ்க்கல்வி

ஏன் தொடர்பாடல் திறன்களை வளர்க்கும் கல்வியாக மட்டும் அமையாமல், பண்பாட்டு மொழிக்கல்வியாகவும் அமைய வேண்டும்?

புலம்பெயர் தமிழரின் மொழி–பண்பாட்டுத் தொடர்ச்சியை வலுப்படுத்துவதில் குடும்பங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகள் எத்தகைய பங்கை வகிக்க வேண்டும்?

'பண்பு' - 'பண்பாடு': தொன்மையும் புரிதலும்

ஓரினத்தின் நிலைத்த, வலிமையான இருப்பை அளவிடுவதிலும் இருப்பின் பெறுமானத்தைக் கணிப்பதிலும் மொழியும் பண்பாடும் பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே இக்கட்டுரையின் பொருண்மைப் பகுதிக்குச் செல்வதற்கு முன், பண்பு அல்லது பண்பாடு என்ற சொல்லாட்சியின் ஆழத்தைத் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

தமிழ்மொழியின் தொன்மையோடு ஒட்டித் தோன்றிய சொல் வழக்காகப் 'பண்பு' என்ற சொல்லாட்சியும் மிகத் தொன்மையானது என்றே கருதலாம். ஓரினத்தின் செவ்வியல் வாழ்வை அளவிடுவதற்கு அச்சமூகம் பயன்படுத்திய தொன்மையான சொற்களும் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன. பண்பு என்ற தமிழ்ச் சொல்லுக்கும் இச்சிறப்பு உண்டு.

தமிழில் மிகப் பழமையான சொற்களுள் ஒன்றான 'பண்பு' என்ற சொல் இன்றளவில் 'நற்குணம்', 'நல்லொழுக்கம்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டாலும், பழந் தமிழில் இதற்கு இன்னும் விரிந்த பொருள்கள் இருந்தன. இயல்பு, தன்மை, குணம், ஒழுகுமுறை, தகுதி, அழகு, பொருளின் தனிச்சிறப்பு ஆகியவற்றையும் இச்சொல் குறித்தது என்பதை நாம் இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

'பண்பு' – தொன்மையும் பொருள் வளர்ச்சியும்

'பண்பு' என்ற சொல் பழந்தமிழில் இயல்பு, தன்மை, குணம், ஒழுகுமுறை ஆகிய விரிந்த பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் இடம்பெறும் "நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே" என்ற நூற்பா, பண்பு என்பதை ஒரு பொருளின் இயல்பு அல்லது தன்மை என்ற பொருளில் எடுத்தாள்கின்றது. சொல்லதிகாரத்தில் காணப்படும் "பண்புகொள் பெயர்க்கொடை" என்ற தொடரும் பொருளின் குணம் அல்லது சிறப்பியல்பைக் குறிக்கின்றது. இப்பொருள் இன்றும் "பண்புப்பெயர்", "பண்புத்தொகை", "பண்புச்சொல்" போன்ற இலக்கணக் கலைச்சொற்களில் தொடர்கின்றது.

சங்க இலக்கியமான கலித்தொகை, "பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" (கலித் தொகை.133) என்று பண்புக்கு வாழ்வியல் சார்ந்த விளக்கத்தை வழங்குகின்றது. இங்கு "பாடு" என்பது சூழ்நிலை, தகுதி, உலகநெறி மற்றும் பிறருடைய இயல்பு ஆகியவற்றைக் குறிக்கின்றது. எனவே, சூழ்நிலையையும் பிறருடைய இயல்பையும் அறிந்து, அதற்கேற்ப முறையாக நடந்துகொள்வதே பண்பு எனப் பழந்தமிழர் கருதியுள்ளனர்.

திருவள்ளுவர் "பண்புடைமை"க்கெனத் தனி அதிகாரத்தை அமைத்து, பண்பை மனித வாழ்வையும் சமூக ஒழுங்கையும் தாங்கும் அடிப்படை அறமாக எடுத்துரைக்கின்றார்:

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்;
அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்."- திருக்குறள் 996

மேலும், அறிவுக்கூர்மை பெற்றிருந்தாலும் மக்கட்பண்பு இல்லாதவர் மரத்தைப் போன்றவர் என்பதை "அரம்போலும் கூர்மை யரேனும் மரம்போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர்" (திருக்குறள்.997) என்ற குறள் உணர்த்துகின்றது. இவ்வாறு, தொல் காப்பியத்தில் இயல்பு அல்லது தன்மை என்ற பொருளில் காணப்பட்ட "பண்பு", சங்க இலக்கியத்திலும் திருக்குறளிலும் சூழ்நிலையறிந்து ஒழுகுதல், நற்குணம், மனிதநேயம், சமூக ஒழுக்கம் ஆகிய பொருள்களைப் பெற்று விரிவடைந்துள்ளது.

'பண்பு' – 'பண்பாடு' தொடர்பு

'பண்பு' என்ற சொல்லின் பொருள் வளர்ச்சியிலிருந்தே "பண்பாடு" என்ற கருத்து உருவாகியுள்ளது. நிலத்தைப் பயிரிட ஏற்றவாறு பண்படுத்துவதுபோல, மனிதரின் மனம், அறிவு, நடத்தை ஆகியவற்றைச்

செம்மைப்படுத்துவதையும் 'பண்படுத்துதல்' குறிக்கின்றது. இவ்வடிப்படையில், ஒரு சமூகத்தால் தலைமுறைதோறும் பேணப்படும் மொழி, அறிவு, அறம், நம்பிக்கை, வழக்கம், கலை, உறவுமுறை மற்றும் வாழ்வியல் ஒழுங்கு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அமைப்பைப் 'பண்பாடு' எனக் குறிப்பிடலாம்.

தனிநாயகம் அடிகளும் ஆங்கிலத்தின் culture என்ற சொல் நிலத்தைப் பண்படுத்துதல் என்ற பொருளைக் கொண்ட இலத்தீன் சொல்லிலிருந்து உருவானதைப் போல, தமிழின் 'பண்பாடு' என்பதும் நிலத்தையும் மனித மனத்தையும் செம்மைப்படுத்துதல் என்ற கருத்துடன் தொடர்புடையது என விளக்குகின்றார் (தனிநாயகம் அடிகள், 1980).

இதனால், 'பண்பு' என்பது தனிமனிதரின் நல்லியல்பை மட்டும் குறிப்பதல்ல; பிறருடைய இயல்பையும் சமூகச் சூழலையும் அறிந்து அறநெறியுடனும் இசைவுடனும் நடந்துகொள்ளும் வாழ்வியல் முதிர்ச்சியையும் குறிக்கின்றது. இத்தகைய பண்புகள் ஒரு சமூகத்தின் பொதுவான அறிவு, நம்பிக்கை, வழக்கம், வாழ்க்கைமுறையாகத் தலைமுறைகளுக்கிடையே தொடரும்போது அவை 'பண்பாடு' என்ற விரிந்த நிலையை அடைகின்றன.

புலம்பெயர் தமிழர் வாழ்வியலில் தமிழர் பண்பாடு

கடந்த அரை நூற்றாண்டுக்குள் அடையாளம் காணப்பட்ட புதிய தமிழர் வாழ்வியல் தளம் பெயர்வுத் தமிழ்ச் சமூகம் ஆகும். 'புலம் பெயர் தமிழர்' என்பது தமது பிறப்பிடம் அல்லது மரபுவழித் தாயகத்திலிருந்து மற்றொரு நாடு அல்லது பிராந்தியத்துக்குச் சென்று தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ வாழும் தமிழரையும் அவர்களின் அடுத்தடுத்த தலைமுறையினரையும் குறிக்கும் விரிவான கருத்தாகும். பெயர்வுற்றுப் பல்வேறு நாடுகளிலும் வாழும் இவர்களை இணைக்கும் கூறுகள் ஒரே மாதிரியானவை அல்ல; தமிழ்மொழி, தமிழர் மரபு, தாயக நினைவு, குடும்ப வலைப்பின்னல், வழிபாடு, பண்பாட்டு நடைமுறைகள், அரசியல் நினைவுகள், ஊடகப் பயன்பாடு போன்றவற்றில் ஒன்று அல்லது பல கூறுகள் அவர்களிடையே தொடர்புணர்வை உருவாக்குகின்றன. சர்வதேச இடம்பெயர்வு அமைப்பின் சொல்லகராதி, 'diaspora' என்பதைத் தாயகத்திலிருந்து பிரிந்து பல இடங்களில் வாழ்ந்தாலும் உண்மை அல்லது கற்பிதமான தாயகத் தொடர்பு மற்றும் கூட்டுணர்வைத் தொடர்ந்து பேணும் மக்கள் தொகுதிகளோடு தொடர்புபடுத்துகிறது (International Organization for Migration [IOM], 2019).

இந்தக் கட்டுரையில் 'புலம்பெயர் தமிழர்' என்ற சொல், பெயர்வுற்ற முதல் தலைமுறையினருடன் வாழிடநாடுகளில் பிறந்த அல்லது வளர்ந்த இரண்டாம் மற்றும் பிந்தைய தலைமுறையினரையும் உள்ளடக்குகிறது. 'புலம்பெயர்ந்தோர்' என்பது இடமாற்ற அனுபவத்தை வலியுறுத்தும் சொல்; 'புலம் பெயர் சமூகம்' அல்லது 'பெயர்வுத் தமிழ்ச் சமூகம்' என்பது எல்லைகளைக் கடந்து தொடரும் மொழி, குடும்பம், நினைவு மற்றும் நிறுவனத் தொடர்புகளை வலியுறுத்தும் கருத்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

வாழிட நாடுகளின் தேசியப் பொதுமைப் பண்பாடு

இக்கட்டுரையில், வாழிடநாட்டின் அரசியல், சட்ட, கல்வி, மொழி, பொதுவாழ்வியல் நடைமுறைகளால் உருவாகும் பொதுமைத்தளம் 'தேசியப் பொதுமைப் பண்பாடு' எனக் குறிக்கப்படுகிறது. மொழி, கலை, பண்பாடு, மரபுகள் என்பவற்றால் வேறுபட்ட இனக் குழுமங்கள் ஒரே தளத்தில் ஒன்றிணைந்து வாழநேரிடுகின்ற போது, அத்தளத்துக்கே உரித்தான பொதுமைப் பண்புகளை ஏற்கும் நிலை தோன்றுகின்றது. வேறுபட்ட பண் பாட்டுக் குழுக்கள் தொடர்ச்சியாகத் தொடர்பு கொள்ளும்போது அவற்றின் பண்பாட்டு நடைமுறைகளிலும் அடையாளங்களிலும் ஏற்படும் மாற்றச் செயல்முறையை John W. Berry "பண்பாட்டுத் தகவமைவு" (acculturation) என விளக்குகின்றார். அதேவேளை ஒருவர் தமது மரபுப் பண்பாட்டைப் பேணியவாறு வாழிடநாட்டின் பொதுவாழ்வில் பங்கேற்பதை "ஒருங்கிணைவு" எனவும் வகைப்படுத்துகிறார்.

கிம்லிக்கா (Kymlicka, 1995) பன்முகப் பண்பாட்டுச் சமூகத்தில் பொதுக் குடியுரிமையும் இனஞ்சார் அடையாளப் பேணலும் ஒரே நேரத்தில் நிகழக்கூடியவை எனக் குறிப்பிடுகிறார். கனடியப் பன்முகப் பண்பாட்டுச் சட்டமும் பண்பாட்டு மரபுகளைப் பேணும் உரிமையையும் கனடிய சமூகத்தின் பொருளாதார, சமூக, பண்பாட்டு, அரசியல் வாழ்வில் சமமாகப் பங்கேற்க வேண்டியதை யும் ஒருங்கிணைத்து வலியுறுத்துகிறது (Government of Canada, 1988). இளைய தலைமுறையினர் பள்ளியில் இணையும் காலத்திலிருந்தே வாழிடநாட்டின் அரச மொழி, சமூக நெறிகள், குடியுரிமை விழுமியங்கள் மற்றும் பல்லின உறவுகள் அறிமுகமாகின்றன. ஆயினும் இச்செயல் முறை தாயகப்பண்பாட்டை முற்றாக நீக்குவ தில்லை; வாழிடநாட்டின் பொதுவாழ்வும் மரபுவழிப் பண்பாட்டு அடையாளமும் ஒன்றோடொன்று தொடர்புகொள்வதன் மூலம் கலப்பும் மாற்றமும் கொண்ட புதிய புலம் பெயர் அடையாளங்கள் உருவாகின்றன (Canagarajah, 2012; Sankaran, 2022). எனினும் இனஞ்சார் அடையாளங்களும் பண்பாட்டு நடத்தைகளும் குடும்ப அளவிலோ, நிறுவன நிலையிலோ இளையோரிடையே வலுவான தாக்கம் செலுத்தாவிடில் தேசியப்பண்பாட்டுப் பொதுமைத்தளத்தின் பண்பாட்டு நடத்தைகளே ஆளுகை செலுத்தும்.

வாழிட நாடுகளின் பொதுமைப் பண்பாட்டு ஓட்டத்துடன் இணைய வேண்டிய அழுத்தம் இயல்பாகவே இப்புலங்களில் குடியேறும் ஒவ்வோர் இனத்துக்கும் ஏற்படுகின்றது. குறிப்பாக, அந்நாடுகளில் பிறந்து வளரும் இளைய தலைமுறையினர் தேசியப் பொதுமைப் பண்பாட்டை ஒட்டியே தம்மைத் தகவமைத்துக் கொள்வர். இச்சூழலில் வாழிட நாட்டின் மொழியும் பொதுவெளி நடத்தைகளும் இளையோரின் தொடர்பாடல் பயன்பாட்டிலும் அன்றாட நடத்தைகளிலும் பேராளுகை செலுத்தும். இனத்துக்குள்ளான இயக்கநிலையில் இனஞ்சார் பண்பாட்டு நடத்தைகள் வலிமைபெறாவிடில் தேசியப் பொதுமைப் பண்பாட்டுக்கூறுகள் புதிய தலைமுறையினரிடத்தில் வலிமை பெற்று விடவே வாய்ப்புகள் அதிகம்.

பன்முகப் பண்பாட்டு வாழ்புலத்தில் ஓர் இனம் தனது தனித்துவமான அடையாளத் தொடர்ச்சியைப் பேண முயலும்போதே இத்தகைய சவால்கள் தோன்றுகின்றன. தன்னியல்புச் சிறப்புமிக்க பண்பாட்டைக் கொண்ட ஒவ்வோர் இனமும் தனது தாய்மொழிக் கல்வியைத் திட்டமிட்ட, முறை சார்ந்த, பண்பாட்டுச் செறிவுடைய கல்வியாக வலுப்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்துகொள்ள வேண்டும். மொழிக்கல்வி மட்டுமன்றி, கலை, வரலாறு, பண்பாடு சார்ந்த தளங்களிலும் கல்விநிலைக் கட்டமைப்புகள் முதன்மை பெற வேண்டியவை யாகின்றன.

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, அடையாளக் கட்டமைப்புகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொடக்ககாலப் புலம்பெயர்ந் தோரிடையே மேலோங்கியிருந்த தாயகமைய உளப்பாங்கு, பின்னைய தலைமுறைகளிடம் அதே வடிவில் தொடரவில்லை. வாழிடநாடு களில் பிறந்து அல்லது வளர்ந்து, அந்நாடு களின் கல்வி, மொழி, சட்டம், ஊடகம், தொழில்வாய்ப்பு மற்றும் சமூகப் பெறு மதிகளோடு தொடர்புற்ற தலைமுறையினர் கலப்பு அல்லது பன்முகப் பண்பாட்டு அடையாளங்களை உருவாக்கியுள்ளனர். இதனால் அவர்களின் அடிப்படைச் சிந்தனைகள், சமூகத் தேடல்கள், குடும்ப உறவுகள், வாழ்வியல் தெரிவுகள் புதிய திசைகளைப் பெற்றுள்ளன. தாயகத்துடனான உறவுகள் முற்றாக அறுபடாதபோதிலும், அவை நேரடித் தொடர்புகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட, குறியீட்டு மற்றும் இணைய வழித் தொடர்புகளாக மறுவடிவமைக்கப் படுகின்றன. இத்தலைமுறை மாற்றங்கள் வீட்டுமொழிப் பயன்பாடு, தமிழ்மொழித் திறன், பண்பாட்டு அறிவின் பரிமாற்றம், சமூக நிறுவனங்கள், கலை வெளிப்பாடுகளில் பங்கேற்பு ஆகியவற்றைப் பாதிக்கக்கூடியன (Canagarajah, (2012).

கனடா போன்ற பன்முகப் பண்பாட்டுக் கொள்கையைக் கொண்ட நாடுகளில் குடி மக்கள் பொதுவான தேசிய அமைப்பில் பங்கேற்கும் அதேவேளையில் தமது மரபு மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்

களைப் பேணுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும் வாய்ப்பு இருப்பது மட்டுமே தலைமுறைத் தொடர்ச்சியை உறுதிப்படுத்தாது. குடும்ப மொழிக்கொள்கை, வார இறுதிப் பள்ளிகள், வழிபாடு, கலை நிறுவனங்கள், நூலகங்கள், ஊடகங்கள், இணையவழி வலைப்பின்னல்கள், பங்கேற்பு வாய்ப்புகள் ஆகியவை ஒன்றிணைந்தால்தான் பண்பாட்டுப் பேணலைத் தொடர்ச்சியாக வலுப்படுத்த முடியும்.

2021ஆம் ஆண்டுக் கனடிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்ட அதிகாரபூர்வ வெளியீட்டின்படி, கனடாவில் தமிழ்மொழி பேசக்கூடியோர் ஏறத்தாழ 2,38,000 பேர் எனப் பதிவாகியுள்ளனர் (Statistics Canada, 2025). இவ்வெண்ணிக்கை வீட்டில் தமிழைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை மட்டும் குறிக்காமல், தமிழில் உரையாடக்கூடிய அனைவரையும் உள்ளடக்குகின்றது. எனவே, இத்தரவு வீட்டுமொழிப் பயன்பாடு, எழுத்தறிவு, தலை முறை மாற்றம் அல்லது பண்பாட்டு ஈடு பாட்டின் தரத்தைத் தனித்து விளக்காது. ஆகவே கணக்கெடுப்புத் தரவுகள் குடும்ப, நிறுவன, சமூகமட்டத் தரவுகளுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

பண்பாட்டு மொழி

"பண்பாட்டுமொழி" என்ற சொல்லாட்சியைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி 1998ஆம் ஆண்டு CTBC வானொலிக்கு அளித்த நேர்காணலில் பயன்படுத்தியதை ஆய்வாளர் நேரடியாகப் பதிவுசெய்கின்றார். எனினும், இச்சொல்லாட்சியை அவரே முதன்முதலில் உருவாக்கினார் என்பதை உறுதிப்படுத்தப் போதிய முதன்மைச் சான்றுகள் கிடைக்க வில்லை அவரது மொழி–சமூகம்–பண்பாடு சார்ந்த ஆய்வுகள் இக்கருத்துக்கு வலுவான கோட்பாட்டுப் பின்னணியை வழங்குகின்றன.

ஆங்கில மொழியியல் ஆய்வில், 'Cultural Linguistics' (பண்பாட்டு மொழியியல்) என்பதனைத் தனித்தகோட்பாட்டுச் சட்டகமாக விரிவுபடுத்தியவர் அமெரிக்க மானிடவியல் அறிஞரும் மொழியியலாளருமான Gary B. Palmer ஆவார். ஒரு சமூகத்தினர் பகிர்ந்து கொள்ளும் பண்பாட்டுக் கற்பனைகள், மனப் படிமங்கள், உலகப் புரிதல்கள், அவர்களு டைய மொழியின் சொற்கள், இலக்கணம், உருவகங்கள், உரையாடல் முறைகளில் வெளிப்படுகின்றன என்பதே பால்மரின் கோட்பாட்டின் அடிப்படையாகும்.

மொழிக்கும் பண்பாட்டுக்கும் இடையிலான உறவு பற்றிய ஆய்வு 1996இல் தான் தொடங்கியது என்று கருதக்கூடாது. பால் மருக்கு முன்னரே அதற்கான அறிவுப்புல அடித்தளங்களை, Franz Boas, Edward Sapir, Benjamin Lee Whorf போன்ற அறிஞர்கள் உருவாக்கியிருந்தனர்.

பண்பாட்டுமொழி என்பது, வெறும் கருத்துப் பரிமாற்றக் கருவியாகச் செயல்படுவதுடன் நின்றுவிடாமல், ஒரு சமூகத்தின் வரலாறு, இலக்கியம், அறிவு, விழுமியங்கள், நம்பிக்கை கள், கலைகள், சடங்குகள், உறவுமுறைகள் மற்றும் கூட்டுநினைவுகளைப் பதிவுசெய்து தலைமுறைகளுக்கிடையே கடத்துகின்ற மொழியைக் குறிக்கிறது. ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் (UNESCO, 2003) மொழி அருவப் பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்தும் முதன்மையான ஊடகங்களுள் ஒன்று எனக் குறிப்பிடுகின்றது. எனவே தமிழ் தொடர்பாடல் மொழியாக மட்டுமன்றி, தமிழரின் வரலாற்று நினைவு, சமூக அடையாளம், பண்பாட்டுத் தொடர்ச்சியைப் பேணுகின்ற பண்பாட்டு மொழியாகவும் விளங்குகின்றது. ஆயினும் பண்பாடு நிலையானதல்ல என்பதால், பண் பாட்டு மொழியும் பழமையை அப்படியே பாதுகாக்கும் ஊடகமாக மட்டும் அமையாது; காலமாற்றம், புலம்பெயர்வு மற்றும் புதிய தலைமுறைகளின் அனுபவங்களை உள் வாங்கி மரபைப் புதுப்பிக்கும் இயக்கமிக்க தளமாகவும் செயல்படுகிறது.

ஓரினத்தின் பண்பாடுசார் இயங்குதளம் அவ்வினத்தின் தலைமுறைத் தொடர்ச்சியோடு இணைந்து எவ்வாறு இயக்கிச் செல்லப் படுகின்றது என்ற வினா இக்கட்டுரைக்கு முக்கியமானது.

இவ்வினாவுக்கு 'இளையோர் சமூகத்திலுள்ள மூத்தோரிடமிருந்து காலந்தோறும் பண்பாட்டு விழுமியங்களைக் கற்றுச் செல்கின்றனர்'

என மேம்போக்காக விடை கூறமுடியாது. அச்சமூகத்தோடு இணைந்தியங்கிச் செல்லும் சில காவிகளே தலைமுறைதோறும் பண் பாட்டு நடத்தைகளைச் சுமந்து செல்கின்றன என்பதே உண்மை.

சில இனங்களிடையே மரபு, பண்பாட்டுக் காவிகளாக மதங்கள் இருக்கின்றன. மதமே அவ்வினத்துக்கான வாழ்வியல் சட்டகங்களை வகுத்து, அதற்குள் இறைநெறி வழிப்பட்டு, பண்பாட்டு இயங்குதளத்தைப் பேணிச் செல்லும். இவ்வினங்களின் மதம் மாற்றத் துக்குட்படும் போது, மரபுவழிப் பண்பாட்டுக் கூறுகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

வேறு சில இனங்களில் அரசியல் சட்டங்கள் பண்பாட்டு நடத்தைகளைக் காவிச் செல்கின்றன. ஓரினம் தம்மைத்தாமே ஆட்சி செய்யும் போது சட்டங்களாலும் ஆணைக ளாலும் பண்பாட்டு இயங்குதளத்தைப் பேணிக்கொள்கின்றது. அவ்வாறான அரசியல் அமைப்புகள் சிதைவுறும்போது, அவற்றால் பாதுகாக்கப்பட்ட பண்பாட்டு நடைமுறைகள் வலுவிழக்கும் அபாயம் ஏற்படுகின்றது.

குறித்த சில இனங்களின் தாய்மொழிகளே பண்பாட்டு விழுமியங்களைப் பன்னூற்றாண்டு களாகப் பாதுகாத்துச் செல்கின்றன. ஆற்றல் மிக்கதான தாய்மொழியே தலைமுறைதோறும் வாழ்வையும் வரலாற்றையும் மரபுகளையும் பண்பாட்டு நடத்தைகளையும் இலக்கியங்க ளையும் கற்பித்துச் செல்கின்றது. அதே வேளை ஏற்ற மாற்றங்களை உள்ளீர்த்து, இனத்தின் பண்பாட்டு இயங்குதளத்தைப் பேணிச்செல்வதும் மொழியே. இச்செவ்வியல் இயல்பு கொண்ட மொழியே 'பண்பாட்டு மொழி' என்ற சிறப்பைப் பெறுகின்றது. உலகின் பல மொழிகள் இச்சிறப்பைப் பெற்றுள்ளன. மேற்குறித்த இயல்புகளைக் கொண்ட தமிழ்மொழி, பண்பாட்டு நினைவுக ளையும் வாழ்வியல் விழுமியங்களையும் தலைமுறைகளுக்குக் கடத்தும் பண்பாட்டு மொழியாக விளங்குகின்றது. தொல்காப்பிய மும் திருக்குறளும் தமிழ் மொழி இலக்கண அறிவையும் மானுட வாழ்வியல் விழுமியங் களையும் சுமந்து வந்துள்ளதைச் சான்றுப் படுத்துகின்றன. இதன் அடிப்படையில் தமிழ்மொழியானது, பண்பாட்டு நினைவு களைத் தலைமுறைகள் தோறும் கடத்திச் செல்கின்றது எனக் கருத முடிகின்றது.

இவ்வாறான பேராற்றல்மிக்க தாய்மொழி வழக்கொழியுமானால் அத்தோடு இவ்வினங் களில் பண்பாடுசார் இயங்குதளமும் வலுவிழந்து போவது மட்டுமன்றி, அவ்வினத்தின் தனிச்சிறப்பு மிக்க மொழிசார் அடையாளமும் பண்பாட்டுத் தொடர்ச்சியும் வலுவிழக்கும் நிலை ஏற்படலாம். தமிழினத்தின் இருப்புக்கும் அடையாளத்துக் குமான வேரும் நிலமும் தமிழ்மொழியே. தாய்மொழிப் பயன்பாடு வலுவிழக்கும்போது, மொழி வழியாகக் கடத்தப்படும் பண்பாட்டு அறிவும் தலைமுறைத் தொடர்பும் பாதிக்கப் படக்கூடும். எனினும், மொழித்திறன் குறைந்த நிலையிலும் குடும்பம், சமயம், கலை, உணவு, வரலாற்று நினைவு போன்ற பிற கூறுகளின் வழியாகத் தமிழர் அடையாளம் தொடரக்கூடும். ஆகவே, மொழி இழப்பை அடையாளத்தின் முழுமையான அழிவாகக் கருதாமல், அடையாள மறுவடிவமைப்பின் ஒரு முக்கியக்காரணியாக அணுகவேண்டும்.

மேற்குறித்த கருத்துகளின் அடிப்படையிலேயே தமிழ் சிறந்த பண்பாட்டு மொழியாகத் திகழ்கின்றது. 'Tamil - A Biography' என்ற நூலை எழுதிய அமெரிக்க, இந்தியவியல் பேராசிரியரான டேவிட் சுல்மன், தமிழை ஒரு மொழியாக மட்டும் அணுகாமல், இலக்கியம், சமயம், வரலாறு, அழகியல் மற்றும் சமூக நினைவு ஆகியவற்றை உள்ளடக்கிய பண்பாட்டு மரபாக அணுகுகின்றார்.

புலம்பெயர் தமிழர் இருப்பில் பண்பாட்டு மொழி

தமிழினத்தின் அடையாளத் தொடர்ச்சியைப் பேணிச் செல்வதற்கு உலகளாவிய தமிழினத் தோர் அனைவரும் பண்பாட்டு மொழி தொடர்பான தெளிவான புரிந்துணர்வைக் கொண்டிருத்தல் முதன்மையானது. தமிழ் மக்கள் வாழும் சூழலும் அது சார்ந்த சமூகக் கட்டமைப்புகளுமே இவை பற்றிய தேடல்களையும் தேவைகளையும் விரிவாக்க வல்லன.

உலகில் வளர்ச்சியடைந்ததாகக் கருதப் படுகின்ற பல்வேறு நாடுகளிலும் பெரும்

பாலான தமிழர் தமது வாழ்வை நிலைப் படுத்திவிட்டனர். இரண்டாம் மூன்றாம் தலை முறையினர் வாழும் நாடுகளில் செல்வாக்கு மிக்க குடிமக்களாக வாழத் தலைப்பட்டு விட்டனர். இவர்களுள் பலரும் மீளவும் தாயகத்துக்குப் பெயரப் போவதில்லை. வாழிடநாடுகளில் தமிழினம் என்ற கட்டமைப்புக்குள் அடையாளம் சார்ந்த இருப்பைப் பேணியவாறு ஒன்றிணைவும் தன்னியல்புச் சிறப்பும் மிக்க சமூகமாக வாழ வேண்டிய அழுத்தம் பெயர்வுத் தமிழ்ச் சமூகத்துக்கு உண்டு. தாயகத்தைப் போன்று இவ்வாழ்வு இயல்பாக நடைபெறும் தன்மை கொண்டதன்று. அடையாளப்பேணல் தொடர்பில் வகைதொகையின்றி எதிர்ப்படும் சவால்களை வெற்றிகொண்டு, பண்பாட்டு மொழிக்கல்வியின் வழியே இனத்தைப் பாதுகாத்துச் செல்ல, நிறுவனமயப்பட்ட, பொறுப்புமிக்க சமூக இயக்கம் தேவைப் படுகிறது. இவ்வியக்கம் இடையறாது நிகழ வேண்டியது.

உலகின் பல பாகங்களிலும் குடியேறிய சமூகங்கள், வாழிடநாடுகளின் மொழி, அந்நாட்டுக்குரிய பொதுமைப் பண்பாட்டின் தாக்கத்தால் தமது மரபுவழி அடையாளங் களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை எதிர் கொண்டுள்ளன. கரீபியப் பகுதிகளில் வாழும் தமிழ்வேர்கொண்ட சமூகங்களின் வரலாறு, மொழி இழப்புக்கும் பண்பாட்டு அடையாள மாற்றத்திற்கும் குறிப்பிடத்தக்க எடுத்துக் காட்டாக அமைகின்றது. குறிப்பாகக் கயானா வில் தமிழ்மொழி தலைமுறைப் பயன் பாட்டிலிருந்து பெருமளவு விலகியுள்ள போதிலும், மாரியம்மன்-காளி வழிபாடு, மதுரை வீரன் மரபு, தப்பு இசை, சடங்கு ஆடல், தென்னிந்திய மூதாதையர் நினைவு ஆகியவற்றின் வழியாகத் தமிழ்சார் "Madrasi" அடையாளம் மாற்றமடைந்த வடிவில் தொடர்கின்றது (George, 2018).

இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் இனஞ் சார்ந்த தன்னியல்புப் பண்பாட்டுப் பேணல் கள் தொடர்பான ஆழமான சிந்தனைகள் எழுகின்றன. பொதுமைப் பண்பாட்டைப் பின்பற்றும் அதேவேளையில் எவ்வாறு இனஞ்சார் பண்பாடுகளையும் மரபுகளையும் பேணலாம் என்ற தேடல்களும் உருவாகின் றன. பல்லினப் பண்பாட்டு வாழ்புலத்தில் வாழும் தன்னியல்பு அடையாளங்கள் மிக்க இனத்தோரிடையே எழுகின்ற இவ்வாறான தேடல்கள் தவிர்க்க முடியாதவையும் இயல்பானவையும் ஆகும்.

பெரிதும் பொருளாதாரப் பின்புலத்தையே மையமாகக் கொண்டியங்கும் இயந்திர இயக்கத்துக்கு ஒப்பான புலம்பெயர் வாழ் புலத்தில் தன்னியல்புப் பண்பாட்டுப் பேணல் சவால் மிக்கது. புலம்பெயர் சமூகத்தின் வாழ்புலச் சூழல், ஒவ்வொருவரையும் சூழ்ந்திருக்கும் பொருளாதாரத் தேவைகளை யும் அன்றாட வாழ்வியல் போராட்டங்களை யும் கொண்டுள்ளது. அவற்றை மீறிப் பண்பாட்டுப் பேணல் குறித்து ஆழமாகச் சிந்தித்துச் செயற்படுவது எளிதானதல்ல.

புலம்பெயர் தலைமுறைகளில் சிலர் தமிழர் என்ற மரபுவழி அடையாளத்தைவிட வாழிட நாட்டின் தேசிய அடையாளத்துக்கு முன்னுரிமை வழங்குகின்றனர். வேறு சிலர் இரண்டு அடையாளங்களையும் இணைத்துக் கனடியத் தமிழர், பிரித்தானியத் தமிழர் போன்ற கலப்பு அடையாளங்களை உருவாக்குகின்றனர். இதனைப் பண்பாட்டு இழப்பாக மட்டும் கருதாமல், புலம்பெயர் சூழலில் நிகழும் அடையாள மறுவடிவமைப் பாகவும் அணுக வேண்டியுள்ளது (Sankaran, 2022).

'அடையாளப் பேணல்மிக்க இனஞ்சார் இருப்பு' என்ற தளத்திலிருந்து காலந்தோறும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் விடுபட்டுச் செல்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆய்வாளரின் கல்விப்பணி சார்ந்த அவதா னிப்புகளின்படி, கடந்த நாற்பது ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அடையாளப் பேணல் முயற்சிகள் பலவும் மாணவர் மையக் கல்விச் செயற்பாடுகளுக்குள் மட்டுப்பட்டு உள்ளன. மாணவர் கல்விசார் ஒழுங்கில், குடும்பத்தையும் பரந்த சமூக இயக்கத்தையும் இணைக்கும் நிறுவனமயப்பட்ட முயற்சிகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியுள்ளன.

பண்பாட்டு மொழிக்கல்வி

புலம்பெயர் மாணவர்களுக்கான தாய்மொழிக் கல்வி வெறுமனே கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய தொடர்பாடல்

திறன்களை வளர்ப்பதுடன் நின்றுவிடக்கூடாது. அது மொழியின் வழியாகப் பண்பாட்டு அறிவு, குடும்பநினைவு, சமூக அடையாளம், தலைமுறைத் தொடர்ச்சி ஆகியவற்றை உருவாக்கும் பண்பாட்டு மொழிக்கல்வியாக அமைய வேண்டும். Claire Kramsch தனது Context and Culture in Language Teaching (1993) நூலில், மொழிக் கற்றலில் பண்பாட்டு அறிவு தொடர்பாடல் திறனின் ஒரு துணைக் கூறு மட்டுமல்லாமல், தனித்த கல்வி இலக்காகவும் அமைய வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

அவருடைய கருத்தின்படி, மொழியைக் கற்பித்தல் என்பது,

- சொற்களைக் கற்பித்தல்,
- இலக்கண விதிகளைக் கற்பித்தல்,

சரியாகப் பேசப் பயிற்றுவித்தல்

என்பவற்றுடன் முடிவடைவதில்லை. அந்த மொழியைப் பயன்படுத்தும் மக்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள், உறவுகளை எவ்வாறு புரிந்து கொள்கிறார்கள், எந்தச் சூழலில் எவ்வாறு பேசுகிறார்கள், நிகழ்வுகளுக்கு எத்தகைய பண்பாட்டுப் பொருள்களை வழங்குகிறார்கள் என்பவற்றையும் கற்பிக்க வேண்டும்.

இதன்படி, மொழியைக்கற்போர் திறமையான மொழிப் பயனாளர்களாக மட்டுமன்றி, பண்பாடுகளுக்கிடையே அர்த்தங்களை உருவாக்கக் கூடியவர்களாகவும் வளர வேண்டும். உதாரணமாக, "வணக்கம்" என்ற சொல்லின் பொருளையும் உச்சரிப்பையும் கற்பிப்பது தொடர்பாடல் மொழிக் கல்வி. ஆனால்,

- யாருக்கு வணக்கம் கூறப்படுகிறது?
- இரு கைகளையும் கூப்பிடுவது எதைக் குறிக்கிறது?
- பெரியோரை எவ்வாறு அழைக்க வேண்டும்?
- "நீ", "நீர்", "நீங்கள்" என்பவற்றின் பண் பாட்டு வேறுபாடு என்ன?

உறவினரைத் தனிப்பெயரால் அழைக்காமல் உறவுமுறைப் பெயர்களால் அழைப்பது ஏன்?

இத்தகைய பண்பாட்டுப் பொருள்களைச் செயல்வழியாக உணர்த்துவதே பண்பாட்டு மொழிக்கல்வியாகும். அதாவது, சொல் மட்டுமல்ல; சொல்லின் பின்னாலுள்ள பண் பாட்டுப் பொருளும் ஆழமும் கற்பிக்கப்பட வேண்டும்.

Michael Byram (1997), மொழிக் கல்வி மாணவரை இலக்கணத் துல்லியமுடைய மொழிப்பயனாளராக மட்டும் உருவாக்காமல், வெவ்வேறு பண்பாட்டு அடையாளங்களையும் விழுமியங்களையும் புரிந்துகொண்டு அவற்றுக் கிடையில் செயல்படக்கூடிய பண்பாடுகளுக் கிடையிலான தொடர்பாளராக உருவாக்க வேண்டும் என்கிறார். Jim Jim Cummins இன் பன்மொழிக் கல்விச்சிந்தனைகள், மாணவரின் தாய்மொழிக்கும் பண்பாட்டு அடையாளத் திற்கும் வழங்கப்படும் அங்கீகாரம் அவரது கற்றல் ஈடுபாட்டையும் தன்னம்பிக்கையையும் வலுப்படுத்துவதாகக்காட்டுகின்றன (Cummins et al., 2005).

எனவே, புலம்பெயர் தமிழருக்கான தமிழ்க் கல்வி மொழித்திறன், பண்பாட்டு அறிவு, அடையாள உருவாக்கம், தலைமுறைத் தொடர்புவாழிடநாட்டின் பல்பண்பாட்டுப் புரிதல் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் கல்வியாக வடிவமைக்கப்பட வேண்டும்.

தாயக வாழ்வில் பண்பாட்டு நடத்தைகளையும் அவற்றின் உள்ளார்ந்த பொருள்களையும் பள்ளிகள் மட்டுமே கற்பிப்பதில்லை; அன்றாட வாழ்வும் குடும்ப உறவுகளும் மூத்தோரின் வழிகாட்டலும் அவற்றை இயல்பாக உணர்த்துகின்றன. பெயர்வுற்றோர் வாழிட நாடுகளில் 'கல்வி' வாயிலாகவே இனஞ்சார் அடையாளங்களையும் பண்பாட்டு உணர்வு களையும் ஊட்ட வேண்டியிருக்கின்றது. தமிழரின் மொழி, இன அடையாளம், பண்பாடு, மரபுகள் ஆகியவற்றின் தொடர்ச்சி குறித்த போதிய விழிப்புணர்வு பெற்றோரி டையே இல்லாமையும் பண்பாட்டுத் தொடர்ச்சியைப் பேணுவதில் பின்னடைவை ஏற்படுத்துகின்றது.

புலம்பெயர் தமிழரின் வாழ்வியல் தளத்தில் இயங்கும் சமூக நிறுவனங்களும் கல்வி மையங்களுமே பண்பாட்டு மொழிக்கல்வி தொடர்பில் ஆழமான ஈடுபாட்டைக்

கொண்டியங்க வேண்டும். தொடர்பாடல் மொழிக்கல்விக்கும் பண்பாட்டு மொழிக் கல்விக்குமான வேறுபாட்டைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

பண்பாட்டு மொழிக்கல்வி தொடர்பாடல் மொழிக்கல்விக்கு மாற்றான ஒன்றல்ல; தொடர்பாடல் திறன்களைப் பண்பாடு, அடையாளம், வரலாறு மற்றும் சமூக அனுபவங்களுடன் இணைத்து விரிவுபடுத்தும் கல்வி அணுகுமுறையாகும்.

தொடர்பாடல் மொழிக் கல்வி	**பண்பாட்டு மொழிக் கல்வி**
பேசுதல், கேட்டல், வாசித்தல், எழுதுதல்	மொழித்திறனுடன் பண்பாடு, அடையாளம், நினைவு
சொற்களையும் வாக்கியங்களையும் கற்பித்தல்	சொற்களின் சமூக - பண்பாட்டுப் பொருளைக் கற்பித்தல்
சரளமும் இலக்கணத் துல்லியமும்	பொருத்தமான சூழலில் பொருத்தமாக மொழியைப் பயன்படுத்துதல்
அன்றாட உரையாடல்	குடும்பம், உறவு, விழுமியம், இலக்கியம், வரலாறு
மொழிப் பயனாளரை உருவாக்குதல்	பண்பாட்டு அர்த்தங்களை உணர்ந்து செயல்படும் மாணவரை உருவாக்குதல்
வகுப்பறையை மையப்படுத்துதல்	வகுப்பறை–குடும்பம்–சமூகம் ஆகியவற்றை இணைத்தல்
நிகழ்கால மொழிப்பயன்பாட்டை முதன்மைப்படுத்துதல்	தாயக, வாழிட, உலகப் பண்பாட்டு அனுபவங்களை ஒப்பிட்டு ஆராய்தல்
மொழித் தேர்ச்சியை மட்டும் மதிப்பிடுதல்	மொழி, பண்பாட்டு புரிதல், அடையாள வெளிப்பாடு ஆகியவற்றை மதிப்பிடுதல்

நிறைவுரை

புலம்பெயர்வு, தமிழரின் வாழ்விடத்தை மட்டுமன்றி, அவர்களுடைய மொழிப் பயன்பாடு, குடும்ப உறவுகள், பண்பாட்டு நடைமுறைகள், தாயக நினைவுகள், இன அடையாளம் ஆகியவற்றையும் மறுவடிவ மைத்துள்ளது. வாழிடநாடுகளின் பொதுவாழ் வோடு ஒருங்கிணைதல் புலம்பெயர் தமிழரின் சமூக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. அதே வேளையில், இவ்வொருங்கிணைவு மரபுவழிப் பண்பாட்டு அடையாளங்களை முற்றாகத் துறப்பதாக அமைந்துவிடக்கூடாது. பொதுக் குடியுரிமை அடையாளத்தையும் இனஞ்சார் பண்பாட்டு அடையாளத்தையும் ஒருங்குசேரப் பேணக் கூடிய பன்முக அல்லது இரட்டை அடையாளமே புலம்பெயர் தமிழரின் எதிர் கால இருப்புக்கு வலுவான அடித்தளமாக அமைய முடியும்.

இத்தகைய அடையாளத் தொடர்ச்சியில் தமிழ்மொழி முதன்மையான பண்பாட்டுக் காவியாக விளங்குகின்றது. தமிழ், கருத்துப் பரிமாற்றத்துக்கான மொழியாக மட்டுமன்றி, தமிழரின் வரலாறு, இலக்கியம், உறவுமுறை, அறவிழுமியங்கள், கலைகள், சடங்குகள், வாழ்வியல் அனுபவங்கள், கூட்டுநினைவு களைத் தலைமுறைகளுக்கிடையே கடத்தும் பண்பாட்டு மொழியாகவும் செயற்படுகின்றது. எனினும், பண்பாட்டைப் பழமையின் மாறாத வடிவமாக உறையவைத்துப் பேணுதல் வாழிட நாடுகளில் சாத்தியமானதல்ல. அது விரும்பத்தக்கது மல்ல. வாழிடநாட்டின் அனுபவங்கள், புதியதலைமுறைகளின் சிந்தனைகள், சமத்துவம், மனித உரிமை, பல்வகைமை போன்ற சமகால விழுமியங்கள் ஆகியவற்றை உள்வாங்கி மரபைப் புதுப்பிக்கும் இயக்கமிக்க தளமாகவே பண்பாடு அணுகப்பட வேண்டும். எனவே, புலம்பெயர் மாணவர்களுக்கான தமிழ்க்கல்வி, கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய மொழித்திறன்களை வளர்ப்பதுடன் நின்றுவிடாமல், குடும்ப நினைவு, பண்பாட்டு அறிவு, வரலாற்றுணர்வு, சமூகப் பொறுப்பு, விமர்சனச் சிந்தனை மற்றும் பண்பாடுகளுக் கிடையிலான புரிதல் ஆகியவற்றையும் வளர்க்கும் பண்பாட்டு மொழிக்கல்வியாகவும் வடிவமைக்கப்பட வேண்டும். இப்பொறுப்பு தமிழ்ப் பள்ளிகளுக்கு மட்டும் உரியதல்ல. குடும்பங்கள், கல்வி நிறுவனங்கள், கலை அமைப்புகள், வழிபாட்டு மையங்கள், ஊடகங்கள், சமூகத் தலைமைகள், இளைய தலைமுறையினர் ஆகிய அனைவரும்

இணைந்து முன்னெடுக்க வேண்டிய கூட்டுப் பணியாகும். புலம்பெயர் சூழலில் தமிழின் எதிர்காலம், எத்தனை பேர் தமிழைப் பேசுகின்றனர் என்ற எண்ணிக்கையால் மட்டும் தீர்மானிக்கப் படுவதல்ல. அந்த மொழியின் வழியாக எத்தனை பேர் தமது வரலாற்றை அறிகின்றனர், குடும்ப உறவுகளைப் பேணுகின்றனர், பண்பாட்டு நினைவுகளைப் புதுப்பிக்கின்றனர், வாழிடச் சமூகத்துடன் பொறுப்புடன் இணைகின்றனர் என்பதாலேயே தீர்மானிக்கப்படும். ஆகவே, தமிழைப் பேணுதல் என்பது கடந்த காலத்தைமட்டும் பாதுகாக்கும் முயற்சியல்ல; புலம்பெயர் தமிழரின் எதிர்கால அடையாளத் தையும் சமூகஇருப்பையும் படைப்பாற்றலு டன் கட்டமைக்கும் தலைமுறைப் பொறுப்பாகும்.

துணைநூல் பட்டியல்:

- தொல்காப்பியர். தொல்காப்பியம்: சொல்லதிகாரம்.
- நல்லந்துவனார் (தொகுப்பு). கலித்தொகை.
- திருவள்ளுவர். திருக்குறள்.
- சிவத்தம்பி, கா. இலக்கணமும் சமூக உறவுகளும்.
- தமிழர் பண்பாடும் அதன் சிறப்புகளும் (பக். 3) - வண. பிதா. தனிநாயகம் அடிகள்
- Berry, J. W. (1997). Immigration, acculturation, and adaptation. Applied Psychology, 46(1), 5–34.
- Byram, M. (1997). Teaching and assessing intercultural communicative competence. Multilingual Matters.
- Canagarajah, A. S. (2012). Styling one's own in the Sri Lankan Tamil diaspora. Journal of Language, Identity & Education, 11(2), 124–135.
- Cummins, J., Bismilla, V., Chow, P., Cohen, S., Giampapa, F., Leoni, L., Sandhu, P., & Sastri, P. (2005). Affirming identity in multilingual classrooms. *Educational Leadership, 63*(1), 38–43.
- Government of Canada. (1988). Canadian Multiculturalism Act.
- International Organization for Migration. (2019). Glossary on migration.
- Kramsch, C. (1993). Context and culture in language teaching. Oxford University Press.
- Kymlicka, W. (1995). Multicultural citizenship. Clarendon Press.
- Palmer, G. B. (1996). Toward a theory of cultural linguistics. University of Texas Press.
- Sankaran, L. (2022). Sri Lankan Tamil experiences of the home-land and host-land. Language in Society, 51(1), 143–166.
- Shulman, D. (2016). Tamil: A biography. Harvard University Press.

Statistics Canada. (2025). *Language diversity in Canada*. Catalogue No. 11-627-M. https://www150.statcan.gc.ca/n1/pub/11-627-m/11-627-m2025007-eng.htmStatistics

- UNESCO. (2003). Convention for the safeguarding of the intangible cultural heritage.
- George, S. L. (2018). Invoking the supernatural and the supranational: Tappu, trance, and Tamil recordings in Indo-Guyanese "Madras Religion" and the politics of sonic presence. *Civilisations, 67*, 41–57. https://doi.org/10.4000/civilisations.4822